ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2148/36 - 2019 නොවැම්බර් මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.11.07

*2148/36 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (xiv)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*20(4)* (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் *20(4)* (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தினது அலுவல்களின் நிர்வாகம் பாரதூரமான முறையில் சீர்குலைந்துள்ளதெனவும் சொல்லப்பட்ட நிறுவகத்தின் அதிகாரிகள் வழமையான நிலைமைகளை மீள நிலைநாட்டுவதற்குத் தவறியுள்ளனரெனவும் திருப்திப்படுவதன்மேல், சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச் சட்டத்தின், நியதிச் சட்டத்தின், துணை விதியின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின் கீழ் மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள முறையே ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்திற்காக, மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் சொல்லப்பட்ட பணிப்பாளருக்குப் பதிலாகத் தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கு (ஓய்வுபெற்ற) மேஜர் ஜெனரல் சாந்தகுமார் திருநாவுக்கரசு அவர்களை *2019*, நவெம்பர் மாதம் *15* ஆந் திகதியிலிருந்து இக்கட்டளை மூலம் நியமிக்கின்றேன்.

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2019*, நவெம்பர் *07*.

*11-1394*

1A - PG 4741 — 518 (2019/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.